# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 119 07—05—1993

இதழ்: 09 விலை ரூபா 3-50


10-5-1993

## மனித மாண்பு, சகோதரத்துவம், சுதந்திரம் வளரவேண்டும்

'' நம் உழைப்பின் நற்பலன்கள் '' மட்டுமல்லாது ' மனிதனின் மாண்பு, சகோதர ஒன்றிப்பு, சுதந்திரம் ' ஆகிய நலன்களும் கூட மனித உழைப்பால்தான் இம்மண்ணுலகில் வளரவேண்டும். வாழும் இறைவனின் வார்த்தைக்குச் செவிமடுத்து, உழைப்பைச் செபத்தோடு இணைக்கின்ற கிறிஸ்தவன், தன் உழைப்பு இம்மண்ணுலக முன்னேற்றத்தைப் பொறுத்தமட்டுமல்லாது இறையரசின் வளர்ச்சியிலும் எத்தகைய பங்கு வகிக்கிறது என்பதை அறிந்திருக்கவேண்டும்.

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்
'' மனித உழைப்பு '' — சுற்றுமடல்

✻ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ✻

### இடம் பெயர்ந்த நம்மைவிட்டு

# "ஏற்றத் தாழ்வுகள் - வேறுபாடுகள் இடம் பெயரட்டும்"

★ அருட்தந்தை T. E. தேவராஜன்

" இடம் பெயர்ந்து தவிக்கின்றோம். உண்மைதான். ஆனால் யார் எவர் என்று பாராமல் கூடிவாழ, புரிந்து வாழ, ஏற்று வாழ, பகிர்ந்து வாழ கிடைக்கின்ற வாய்ப்பு இனிய வாய்ப்பாகும். இடம் பெயர்ந்த நம்மோடு, நான் என்று நீ என்று—நாம் வளர்த்த ஏற்றத்தாழ்வுகளும் வேறு பாடுகளும் நம்மை விட்டு இடம் பெயர நல்லதோர் வாய்ப்பு, " என்று கூறினார் அருட்தந்தை T. E. தேவராஜன் அடிகளார்.

கடந்த பல வருடங்களாக, இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து இங்கிலாந்து, பிரான்சு நாடுகளில் வாழும் தமிழ் கத்தோலிக்கருக்கு ஆன்ம பணியாற்றி வரும் அருள்திரு T. E. தேவராஜன் மேற்கண்டவாறு கூறினார்.

இங்குள்ள தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கவும், அங்குள்ளவர்களின் ஆன்ம, உளநலனைக் கவனிக்கவும் அந்நாட்டு கத்தோலிக்க ஆயர்களால் நிறுவப்பட்ட ''தமிழ் கத்தோலிக்க பணியகத்திற்கு''ப் பொறுப்பாளராக அருட்தந்தை T. E. தேவராஜன் பணியாற்றி வருகிறார். தன் தாயகத்திற்குத் திரும்பவும் வருகை தந்த பொழுது ''காவலனுக்கு'' தன் இதயக் குமுறல்களைத் தெரிவித்தார்.

''மக்கள் படும் துன்பங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, இழப்புகளும், இறப்புகளும்; இடிபாடுகளும் இடம் பெயர்தலும் ஒய்ந்தபாடில்லை. விடிகின்ற பொழுது ஒவ்வொன்றும் விடுக்கும் சவால்களும் நாளுக்கு நாள் புதியவையே. இந்நிலையிலும், எந்நிலையிலும் வாழத் தெரியும் என்று சமாளித்து வாழப் பழகிக் கொண்டாலும், வாழ்க்கை சுமையானதாக, கொடுமையானதாகவே தோன்றுகின்றது.

குருக்களுக்கும் துறவியருக்கும், சிதறிச் சென்ற ஆடுகளைத் தேடிச்செல்ல, அழுவாரோடு அழவும் மகிழ்வாரோடு மகிழவும், அதன் வழி நற்செய்தியாளராகத் திகழவும் கிடைக்கின்ற வாய்ப்பு மட்டுமல்ல, இது பெரும் சவாலுமாகும்.'' என்று அவர் மேலும் கூறினார்.

### ஆயர் திருநிலைப்படுத்தலின்
## 26ஆம் ஆண்டு நிறைவு



11 - 05 - 93

இளைப்பாறிய

யாழ் ஆயர்

அவர்களுக்கு

எம்

அன்பு வாழ்த்துக்கள்

இந்நன்னாளில் இறைவன் அவர்கட்கு ஆன்ம சரீர நலன்களை வழங்கி, அவர்கள் நீடூழி வாழ்ந்து மென்மேலும் இறைபணி செய்ய அருள்கூரவேண்டுமென்று வணங்கி, வாழ்த்துகிறோம்.

### மட்டக்கெல பங்கில்

# திருப்பாலத்துவ சபையின் 150 ஆண்டு நிறைவு விழா

கடந்த 20—02—1993 சனிக்கிழமை மட்டக்கெல பங்கில் திருப்பாலத்துவசபையின் 150 ஆண்டு நிறைவு விழா மிகவும் கோலாகலமான சிறப்பான முறையில் இடம் பெற்றது. பாலத்துவ சபையின் கொடியேற்றத்துடன் பாலத்துவ சபை கீதம் இசைக்கப்பட்டது. 150 பாலகர்கள் எரியும் விளக்குகளுடன் பங்குதந்தையோடு பவனியாக ஆலயத்தை அடைந்தனர். கண்டி மறைமாவட்ட சிறுவர் வேத போதக சபையின் உதவி இயக்குனரும் பங்குத்தந்தையுமாகிய அருட்தந்தை பிதா சின்ஸ்பொஸ்தா சில்வா அடிகளார் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நன்றித் திருப்பலியாற்றுகையில் தனது மறையுரையில் 1843 ஆம் ஆண்டு ஆயர் சால்ஸ் டீ போபின் ஜென்சன் ஆண்டகையால் பிரான்ஸ் நன்சி நகரில் சபை ஆரம்பித்து வைக்கப்பட்டது. சிறுவர்களை தீமைகளில் இருந்து மீட்டெடுக்கவும், பாவ வழியில் இருந்து காப்பாற்றவுமே பாலத்துவ சபை ஸ்தாபிக்கப்பட்டது. இறைவனின்பணிக்காக அழைக்கப்பட்டுள்ள பாலத்துவ சபை சிறார்களின் சிறப்பான அழைப்பை நினைவுப்படுத்தி அவர்கள் தத்தமது பெற்றோர்களுக்கு கீழ் படிந்து வாழ வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். சமுதாயத்தில் இவர்களின் ஒழுக்கமான வாழ்வுக்கும், ஆன்மீக ஆரோக்கிய வாழ்வுக்கும் பாலத்துவ

( தொடர்ச்சி 4ஆம் பக்கம் )

### ஆயர் திருநிலைப்படுத்தலின்
## பத்தாம் ஆண்டு நிறைவு

07 - 05 - 93



திருமலை - மட்டுநகர்

ஆயர் அவர்களுக்கு

அன்பு வாழ்த்துக்கள்

இந்நன்னாளில் மேன்மை தங்கிய ஆயர் அவர்கட்கு ஆன்ம சரீர சுகங்களை வழங்கி அவர்களுடைய இறைபணி மென்மேலும் சிறப்படைந்து அவர்கள் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை வணங்கி, வாழ்த்துகிறோம்.

## விவிலிய போட்டி

சிறுவர்களும் இளைஞர்களும் இறைவார்த்தையை அறிந்து கொள்வதில் ஆர்வத்தை ஏற்படுத்த 7 வது அகில இலங்கை கத்தோலிக்க விவிலிய வினாடி வினா போட்டிக்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. ஆரம்பக்கட்டமான தெரிவுப் பரீட்சை பாடசாலை மட்டத்தில் 26-06-93 லும் பின்னர் முறையே மறைவட்டாரத்திலும், மறைவட்டத்திலும் போட்டிகள் இடம் பெறும்.

இப்போட்டிக்கான அறிவூட்டல் கருத்தரங்குகள் ஆசிரியர்களுக்கும், மறை ஆசிரியர்களுக்கும் மறைவட்டாரங்களில் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களை மறைக்கல்வி நிலையத்தில் தெரிந்து கொள்ளலாம்.

## ஆசிரியரின் மனம் சலிக்காத சேவை

மிருசுவில் பங்கில் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்கால ஞானஒடுக்கம் 25-3-1993 9-30 — 1-30 வரை மிருசுவில் றோ. க. பாடசாலையில் இடம் பெற்றது.

இங்கு மறையுரை ஆற்றிய அருள்திரு. R. M. G. நேசநாயகம் அடிகள் 'தெரிவுகள்' என்ற தலைப்பில் முதலில் எமது ஆசிரிய பணியின் அழைப்பை சிறப்பாக உணர வைத்தார். அழைக்கப்பட்ட நாம் எமது கடமையோடு மட்டும் நின்றுவிடாது சேவையோடு செயற்படவேண்டும் என்றும், அப்படிச் செயற்படும் போதுதான் எமது தெரிவுகள் நல்லதாக மிகவும் நல்லதாக இருக்கும் என்றும் வலியுறுத்திக் கூறினார்.

ஆசிரியராகத் தெரியப்பட்ட எமக்கு பாடசாலையில் பல் வேறுபட்ட பிரச்சினைகளும், பல விதமான வேலைப்பழுவும் ஏற்படக்கூடும். இத்தகைய சந்தர்ப்பங்களில் இவைகளைக் கண்டு மனம் சலிக்காது ''என்னைப் பின் செல்'' என்ற ஆண்டவன் யேசுவின் வார்த்

( தொடர்ச்சி 4ஆம் பக்கம் )

## அரசியல் அமைப்பு மாற்றப்பட வேண்டும்

பல மதங்களை உள்ளடக்கும் பாரதத்தின் அரசியலமைப்பு மாற்றியமைக்கப்படல் வேண்டுமென, தீவிரவாதிகள் அழைப்பு விடுத்ததைத் தொடர்ந்து புது டெல்லியில் பல்வேறு கிறிஸ்தவசபைகள் நடாத்திய கூட்டத்தில் இவ்வாறு கூறினார் குரு ஜோர்ஜ். இந்தியக் கிறிஸ்தவர்கள் பிற மதங்களுடன் மரியாதையுடன் கூடிய பேச்சுவார்த்தை தொடக்க வேண்டுமென்ற விண்ணப்பத்தையும் முன் வைத்தார்.

# எம்கருத்து

## பார்வையாளர்கள் வேண்டாம்!

நாடு கெட்டுவிட்டது. காலம் மாறிவிட்டது. நீதிக்கு இடமில்லை; நியாயத்திற்குக் காலமில்லை. அன்பிற்கு சக்தியில்லை; மன்னிப்புக்கு மனமில்லை. உண்மைக்கு மாண்பில்லை; நேர்மைக்கு மதிப்பில்லை.

அக்கிரமமும், அநியாயமும் தலைதூக்கி நிற்கின்றன். ஊழலும், உபத்திரவமும் ஊறிக்கிடக்கின்றன. பகைமையும், வன்செயலும் தாண்டவமாடுகின்றன,

எங்கு பார்த்தாலும் வஞ்சகம், சூழ்ச்சி, சுயநலம் தான் ஆதிக்கம் செலுத்துகின்றன. மேல்மட்டத்திலும் சரி, கீழ் மட்டத்திலும் சரி; படித்தோர் வட்டத்திலும், பாமரர் கூட்டத்திலும் இதனைக் காணக்கூடியதாயிருக்கிறது. அங்கும் இங்கும் எங்கும் ஒரே நிலை தான்!

இது பொறாமையின் விளைவா? அன்றேல் எரிச்சலின் அறிகுறியா? அகங்காரத்தின் ஆணவமா? அன்றேல் அதிகாரத்தின் இறுமாப்பா?

இதன் விளைவு விபரீதமானது. ஆவலாதி, அவதூறு, சண்டை, சச்சரவு; கொலை, களவு ... ...

ஒருவரின் உயர்வில் புகைச்சல்; அவரை மட்டம் தட்டி, மடியவைப்பதில் சிலருக்கு ஒரு தனி ஆர்வம். தான் வளர வழிகோலாமல், மலரவிருக்கும் ஓர் இதயத்தை படுகுழி தோண்டிப் புதைப்பதில்தான் பேர் போனவர்கள் இவர்கள்.

ஒருவர் மற்றவரைப் புகழ்வதைக் கேட்டு மனப்பூரிப்பு அடைவதற்குப் பதிலாக, பண்பற்ற செயல்களிலும், அநாமதேய அலுவல்களிலும் ஈடுபட்டு, இவர்களின் நற்பெயருக்குக் குந்தகம் விளைவித்து, மானபங்கம் உண்டுபண்ணி, மற்றவர்களைத் துன்புறுத்துவதில் ஒருவித ''சிற்றின்பம்'' அடையும் கோழை உள்ளங்களும் இருக்கின்றன. ''மகிழ்வாரோடு மகிழ்ந்து, அழுவாரோடு அழுங்கள்,'' என்பதற்கு நேர் மாறாக, இவர்கள் மகிழ்வாரை இம்சித்து இகழ்ந்து, புகழ்வாரை அழித்தொழிப்பவராவர்.

இப்படிப்பட்டோர் நம் மத்தியில் பல்வேறு போர்வையில் நடமாடுகிறார்கள். ஒரு சமுதாயத்தினதும், ஒரு சமூகத்தினதும், ஒரு குழுவினதும் அழிவிற்கு வழிகோலும் விஷமிகள் இவர்கள். இவர்களை இனம் காண்பது எளிதல்ல. நெற்கதிர்கள் மத்தியில் விளையும் களைகள்போல் இக்கோழைகளும் கரந்து வாழ்வதில் ஆச்சரியமில்லை.

இந்த நாசகார சக்திகளுக்கு ஓர் முடிவில்லையா? இவர்களைக் களைந்தொழிப்பதற்கு அறுவடை காலம் மட்டும் பொறுத்திருக்க வேண்டுமா?

'உலகம் இனித் திருந்தப் போகிறதில்லை; இது எங்கு கொண்டுபோய் நிறுத்துமோ! ஆண்டவனுக்குத் தான் தெரியும்,' என்று மக்கள் அங்கலாய்ப்பதைப் பார்க்கிறோம்.

முறைகேடான இத்தகைய காரியங்கள் நடைபெறுகின்ற பொழுது அவற்றைக் கண்டு மக்கள் ஆத்திரமும் ஆவேசமும் கொள்வதைக் காண்கிறோம்.

ஆனால் அக்கிரமும், அநீதியும், ஊழலும், உபத்திரவமும், பகைமையும், வன்செயலும் எங்கெங்கு தோன்றுகிறதோ, அங்கேயே அவற்றைக் கண்டிப்பதற்கோ, அவை நடைபெறாமல் தடுப்பதற்கோ, நாம் முன்வருவதில்லை. 'நமக்கேன் இந்தப் பிரச்சனை' என்று ஒதுங்கிக்கொள்ளுகிறோம்.

அநியாயம் செய்பவன் அச்சமின்றி துணிவோடு செய்கிறான்; பாதிக்கப்படுபவர்களைப் பார்த்திருந்தும், நல்லவர்கள், நாணயமுள்ளவர்கள் அதைத் தடுக்கத் துணிவின்றி ஒதுங்கிக் கொள்கிறார்கள். 'நடப்பது அநியாயம்' என்று சொல்லத்தான் தெரிந்திருக்கிறார்களே தவிர, அவற்றைத் தடுக்க முயற்சிப்பதில்லை; கூட்டாக எழுந்து குரல் கொடுப்பதில்லை. தட்டிக்கேட்பாரில்லாக் காரணத்தால் அக்கிரமங்கள் நாளுக்குநாள் பெருக்கெடுத்துக்கொண்டே போகின்றன ... ... ''ஒன்றுபட்டால் வெற்றி காண்போம்''.

## திருமறை அறிவை வளர்ப்போம்

# கிறிஸ்துவின் வருகைக்குப்பின் மீட்பின் வரலாறு

1. திருச்சபை உதயமான காலத்தில் எல்லாம் கிறிஸ்தவரும் கிறிஸ்துவின் தூதுவராகவும் சாட்சிகளாகவும் விளங்கினர். இந்த முதற் கிறிஸ்தவரது சாட்சியத்தின் பலனாக சில ஆண்டுகளுக்குள்ளேயே, கிறிஸ்தவ விசுவாசமானது பலஸ்தீனாவிலிருந்து மத்தியதரைக் கடலைச் சுற்றியுள்ள ஆசிய, ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகளில் பரவி இக்கண்டங்களின் உட்பகுதிகளுக்கும் ஊடுருவலாயிற்று. அப்போஸ்தலரான இராயப்பர் சிரியாவிலும் பின்பு உரோமாபுரியிலும் பணிசெய்தபின், அங்கு வேதசாட்சியாக மரித்தார். சின்னப்பர் கிரேக்க உரோமைப் பிரதேசங்களெங்கும் பணி புரிந்தார். அருளப்பர் ஆசியாவின் மேற்குப் பகுதியில் நற்செய்தி அறிவித்தார். பெரிய யாகப்பர் இஸ்பானியா தேசத்தில் நற்செய்தி அறிவித்தபின் ஜெருசலேமில் அப்போஸ்தலர்களுள் முதல் வேதசாட்சியாக மரித்தார். தோமையார் இந்தியாவில் நற்செய்தி போதித்து வேதசாட்சியாக மரித்தார். சின்ன யாகப்பர் ஜெருசலேமில் யூதர்களிடையே திருச்சபையை அமைத்தார். யூதநாட்டின் எல்லைகளுக்கப்பால் மீட்பின் செய்திபரப்பப்படும் என்ற இசையாஸின் இறைவாக்கு இவ்விதம் நிறைவேறியது.

2. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் அதிகாரம் நிரம்பப்பெற்றவர்களாக, சில ஐயப்பாடுகள் இருந்தபோதிலும், மீட்பு என்னும் கொடை குல, இன வேற்றுமையின்றி அனைவருக்கும் சமமாக அளிக்கப்படுகிற தென்று போதித்தனர். கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு அவரது போதனையின்படி நடப்பதன்மூலம் ஒருவன் இந்த மீட்பு என்னும் கொடையைப் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு இனமும் நற்செய்தி வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர். அதேவேளையில், அவர்கள் தமது மரபுரிமையாகப் பெற்ற மானிட ஆன்மீக செல்வங்களையும் கொண்டிருப்பர். இதனால்தான் அப்போஸ்தலரான சின்னப்பர் ''யூதனாகவும் கிரேக்கரோடு கிரேக்கனாகவும்'' இருந்தார், இறைவன் முன்னிலையில் ''யூதன் என்றோ கிரேக்கன் என்றோ வேறுபாடில்லை. அடிமை என்றோ குடிமகன் என்றோ வேறுபாடில்லை. அனைவரும் கிறிஸ்துவில் ஒரே குடும்பமே'' என்று கூறுகிறார். மீண்டும் ''ஒரே ஆண்டவர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், எல்லார் மேலும், எல்லாரிலும், எல்லாருடாகவும் எல்லார்க்கும் தந்தையாக இருக்கும் கடவுள் ஒருவரே'' (உரோ. 10, 12–13) என்கிறார். தேசிய, கலாசார வேறுபாடுகள் நசுக்கப்படுவதில்லை, மாறாக கிறிஸ்தவ விசுவாசத்தில் முழுமையான ஒரு தூண்டுதலைக் காண்கின்றன.

3. ஆகவே, ஜெருசலேம், உரோமாபுரி, எபேசஸ், கொரிந்து, அந்தியோக்கு, அலெக்சாந்திரியா ஆகிய இடங்களிலிருந்து வந்த அங்கத்தினரைக் கொண்ட கிறிஸ்தவ குடும்பத்தில், முதல் தலைமுறைக் கிறிஸ்தவர்களின் காலத்திலிருந்தே வேறுபாடுகளும் பன்மைநிலையும் இருந்து வந்தன. எங்கு கிறிஸ்தவ நற்செய்தி ஏற்கப்படுகிறதோ, அங்கு அது ஏற்கெனவே இருக்கும் ஆன்மீக மரபுரிமையோடு இணைந்து கொள்கிறது. சகல இனத்தாரினதும் மனித மதிப்பீடுகளும், சமய மதிப்பீடுகளும், அவற்றை தாழ் நிலைப்படுத்தும் கீழ்த்தரமான அம்சங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப் படுவதுடன், கிறிஸ்துவில் மேன்மைப்படுத்தப்படுகின்றன. புனித சின்னப்பர் கூறுவது போல் ''எல்லாம் உங்களுக்கு உரியவையே. நீங்களோ கிறிஸ்துவுக்கு உரியவர்கள். கிறிஸ்து கடவுளுக்கு உரியவர்.'' (1 கொரிந். 3:23)

4. கிறிஸ்தவத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சி மிகச் சுருக்கமாக இங்கு தரப்படுகின்றது. கிறிஸ்துவுக்குப்பின் முதல் நான்கு நூற்றாண்டுகளிலும் கிறிஸ்தவ நற்செய்தியானது மத்தியதரைக்கடலைச் சூழ்ந்த உரோமை இராச்சியத்தின் சகல பகுதிகளுக்கும், அதற்கப்பாலுள்ள ஆபிரிக்கா, மெசப்பொத்தேமியா, பாரசீகம், இந்தியா போன்ற நாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டுவிட்டது. உரோமையர்களின் தேசிய மதம் அரசோடு தொடர்புள்ளதாக இருந்ததால், ஒரே இறைவனையும் அவரது திருமகன் இயேசு கிறிஸ்துவையும் வழிபடுவது கிறிஸ்தவர்களுக்கெதிரான துன்புறுத்தல்களுக்கு வழிகோலியது. சாம்ராச்சியத்தில் அனைவருக்கும் மத சுதந்திரம்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

## மரபுகளும் மாற்றங்களும்

— என். சண்முகலிங்கன்

### 5. அன்பரண்

5·1 மனித உறவுகள் சீராக இயங்குவதற்கு பரஸ்பர புரிந்துணர்வு இன்றியமையாதது. குறுக்குச் சுவர் ஏதும் இல்லாதபடி நம்பிக்கையுடன் இணையும் உறவுகளிடைதான் மகிழ்ச்சியும் அர்த்தமும் விளையமுடியும்.

நவீன வாழ்வில் உறவுகளின் எண்ணிக்கை மட்டுமன்றி, இந்த உறவுகளுக்கான பாத்திர வேறுபாடுகளும் அதிகரித்துச் செல்வன. இந்நிலையில் அடிப்படை உறவு அலகான குடும்பத்துக்குள்ளேயே உறவுச்சிக்கல்கள், திரைகள், தீவுகளாகும் தன்மை வளர்வன.

என்றுமில்லாதவாறு சமூகவாழ்வில் இந்த மனத்திறப்பின் வழியான உறவுகளின் தேவை அதிகரித்துச் செல்லக் காணலாம்.

5·2 கவிஞர்கள், கலைஞர்கள், வாழ்க்கைக் கலையில் தேர்ந்தவர்கள் இந்த சிக்கல் நிலைகளைப் புரிந்துகொண்டு தமது வாழ்விற்கு மட்டுமன்றி உலகுக்கும் ஒளி தருபவர்கள்.

இந்த வகையில் ஆங்கிலக் கவிஞர் எலியட் சித்திரித்த பாத்திரம் என்று நவீன சமூகவாழ்வின் இந்த உறவுத்தேவையை உணர்த்தும் அருமருந்தாகும்.

இப்படி ஒரு உறவு — ஒரே ஒரு உறவு
ஒருவன் வாழ்வில் கிடைத்து விட்டால் ...

எல்லாவற்றையும் அவனிடம் ஒப்புவிக்க ...
எல்லாம் என்றால்,
உன் குற்றங்களை மட்டுமல்ல,

.......................................

நீ முட்டாளாக, அசடனான நிகழ்வுகளையும்
மனதைத்திறந்து சொல்லிட வேண்டும்.

இப்படி ஓர் உறவு இருந்தால்
அவனிடம் எனக்குஉண்மை அன்பு என்று பொருள்.
இந்த அன்பே என்னைக் காக்கும்.

உங்களுக்கு இப்படி உறவு வாய்த்திருக்கிறதா? நவீன சமூகவாழ்வின் முரண்களிடை நாம் உடைந்து போகாமல் காக்க இந்த அன்பு அரண் உடன் வேண்டும். இதன் தேடலும் அர்த்தம்தரும்.

★

# திருமறை அறிவை வளர்ப்போம்....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கப்படும் நாள்வரை இந்நிலை நீடித்தது. ஐந்தாம் நூற்றாண்டளவில், உரோமைச் சாம்ராச்சியம் பலம் குன்றத் தொடங்கிய நேரத்தில் திருச்சபை மூன்று முக்கிய கலாச்சார வலயங்களில் நன்று நிறுவப்பட்டுவிட்டது. இவ்வலயங்களாவன: ஒன்று உரோமாபுரியின் செல்வாக்குக்குட்பட்ட மேற்கத்திய இலத்தீன் வலயம்; இங்கு இராயப்பரின் வாரிசுகள் "முழுக் கிறிஸ்தவ குடும்பத்திற்கும் தலைமைதாங்கி வந்தனர்," (புனித இஞ்ஞாசியார் உரோமருக்கு எழுதிய கடிதம்) ". இங்கு தம் வாரிசுகள் மூலம் இராயப்பர் தொடர்ந்து வாழ்கிறார், பேசுகிறார்." அடுத்தது பைசான்சியத்தின் செல்வாக்குக்குட்பட்ட கிரேக்க கீழைத்தேய வலயம். மூன்றாவது அந்தியோக்கு எடெசாவின் செல்வாக்குக்குட்பட்ட சீரியன் வலயம். இந்த ஒவ்வொரு பிரதேசத்திலும் கிறிஸ்தவமதம் தான் வேரூன்றிய நாடுகளின் பண்புத்திறத்துக்கேற்ற வண்ணம் விருத்தியடைந்தது. ஒன்றில் உரோமர் பயனீட்டுவாத மரபு, மற்றதில் கிரேக்கரின் ஆய்ந்து நோக்கும் உணர்வு, அடுத்ததில் சீரியரின் கடுநோன்புள்ள சமயப் போக்கு. இப்பிரதேசங்கள் ஒவ்வொன்றும் தம்மைச் சுற்றியுள்ள இடங்களில் அமைதியான முறையில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப முற்பட்டன. ஆரம்பமுயற்சி உரோமைத் திருச்சபையிடமிருந்து வந்தது. பிராங், கெல்ற், அங்கிள், சாக்ச்சன் இஸ்லாவ், ஹங்கேரியன், இஸ்காண்டிநேவியன் இனத்தவர்களுக்கு நற்செய்தி பரப்பும் பணியை அவர்கள் மேற்கொண்டனர். பைசான்சியத் திருச்சபை கிழக்கு ஐரோப்பிய நாட்டு மக்களுக்கு விசுவாசத்தைப் பரப்பியது. அந்தியோக்கு எடெசா திருச்சபை மெசப்பொத்தேமியா, பாரசீகம் போன்ற பிரதேசங்களில் நற்செய்தி அறிவித்தது. அங்கிருந்து கிறிஸ்துவின் செய்தியானது இந்தியாவையும், கடந்து பசிபிக் சமுத்திர எல்லை வரை சென்றடைந்தது. அதே வேளையில் அலெக்ஸாந்திரியாவிலும் வடஆபிரிக்காவிலுமிருந்து கிறிஸ்தவமதம் எத்தியோப்பியாவையும் ஆபிரிக்காவின் வேறு பல இடங்களையும் சென்றடைந்தது. சில புனிதர்களின் வாழ்க்கை வரலாறுகள் பல்வேறுபட்ட வளம் பொருந்திய ஆன்மீக அனுபவங்களையும் பிரதிபலிக்கின்றன. ஆபிரிக்காவைச் சேர்ந்த அகுஸ்தீனார் ஆர்வமும் அறிவுத்திறமையுமுடைய இறையியலாளர். ஆசியாவைச் சேர்ந்த ஜோண் கிறிசோஸ்தொம் கடுந்துறவி, சிறந்த பேச்சாளர். உரோமாபுரியைச் சேர்ந்த ஆசீர்வாதப்பர் செபப்பற்றுள்ளவர், கர்மவீரன், மேற்கத்திய துறவற சபைகளின் தந்தை. இந்த மாமனிதர்கள் மேற்கத்திய கலாசாரத்தை உருவெடுத்துக் காட்டுபவர்களாகத் தோன்றுகின்றனர்.

(வளரும்)




| | |
|---|---|
| ஒளி: 7 | எம் விழிகளின் ஒளி யேசு |
| சுடர்: 9 | எம் வாழ்வின் வழி யேசு |

## அம்மா

3. அம்மாவுக்கு அகரவரிசை அர்ச்சனைப் பூக்கள்

அமல உற்பவ அம்மா எங்கள் அருள் நிறை அம்மா.
ஆண்டவனின் அம்மா ஆரோகண அம்மா.
இறைமகனின் அம்மா இரக்கமிகு அம்மா.
ஈசனின் அம்மா ஈகை மிகு அம்மா.
உலகின் அம்மா உன்னத அம்மா.
ஊர்போற்றும் அம்மா அன்பின் ஊற்றான அம்மா
எல்லையற்ற அம்மா எங்கும் காணும் அம்மா.
ஏசுவின் அம்மா பரலோக ஏணியான அம்மா.
ஐயனின் அம்மா ஐக்கியம் காக்கும் அம்மா.
ஒறுத்தல் மிகு அம்மா எம்மை ஒன்றுபடுத்தும் அம்மா.
ஓங்கார செப அம்மா கூப்பிட ஓடிவரும் அம்மா
ஔடதமான அம்மா ஔவியம் போக்கும் அம்மா.
என்றும் உமக்கு எம் அஞ்சலிகள்.

அன்பின் கண்மணிகாள்!

அம்மாவுக்கான அகரவரிசை அர்ச்சனைப் பூக்களை அம்மாவுக்கு அஞ்சலியாக்கி அனுதினமும் செபமாலை சொல்லி வாருங்கள்.

சமாதானத்தின் இராக்கினி எம் நாட்டிற்கு நிச்சயம் சமாதானத்தைத் தருவா.

அங்கத்துவம்

A / 48 A. விஜயகுமார், 53, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
A / 49 யே. கொன்சி அனற், இலங்கா மாதா மடம் அச்சுவேலி
A / 50 இ. எமில் ஜோசப், சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
A / 51 ம. ரஜனி, றோ. க. பாடசாலை, நாவாந்துறை
A / 52 யோ. சுதர்சினி, கன்னியர் மடம் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்
299 அ. அருந்தவமலர், ஆண்டு 10 ,, ,,
300 நீ. ஜெகதீஸ்வரி, ஆண்டு 10 ,, ,,
301 தே. யூட்தாஸ், ஆண்டு 10 சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
302 யே. யெனோலின்ஸ்ரன், ஆண்டு 7 ,, ,,
303 யே. யெலான் அருணோ, ஆண்டு 9 ,, ,,
304 அ. திரேஸ் தனுஜா, ஆண்டு 8 திருக்குடும்ப கன்னியர் மடம் யாழ்ப்பாணம்

அங்கத்துவம் கோரும் கண்மணிகாள் தயவு செய்து பெயர், முகவரி, கற்கும் ஆண்டு, கற்கும் பாடசாலை போன்ற விபரங்களைத் தரவும்.


உங்கள் அன்பின்
அன்பு விழி

---

**அன்பின்**
**நினைவில்**
**20ஆம் ஆண்டு**

பிறப்பு: 01-05-1936
இறப்பு: 06-05-1973

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"


திரு. பி. செ. நீக்கிலாப்பிள்ளை
(ஆசிரியர்)

அன்பு மனைவி
அருமைப் பிள்ளைகள்
47, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

A / 12 / 93

---

**வந்ததே வணக்கமாதம் மரியாயின் மாதமே!**

---

# கத்தோலிக்க திருச்சபையின் மறைபோதகக் கைநூல்

## (Catechism of the Catholic Church)

### பொருளடக்கம்


**1ஆம் பாகம் :**
விசுவாச அறிக்கை.
**1வது பெரும் பிரிவு :**
நான் விசுவசிக்கிறேன் — நாங்கள் விசுவசிக்கிறோம்.
**1வது அத்தியாயம் :**
மனிதன் இறைவனை அறிய முடியும்.
**2வது அத்தியாயம் :**
இறைவன் மனிதனைச் சந்திக்கிறார்.
**3வது அத்தியாயம் :**
இறைவனுக்கு மனிதனின் பதில்.
**2வது பெரும் பிரிவு :**
கிறிஸ்தவ விசுவாசத்தின் அறிக்கை — விசுவாசப்பிரமாணங்கள்.
**1வது அத்தியாயம் :**
பிதாவாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன்.
**2வது அத்தியாயம் :**
சுதனாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன்.
**3 வது அத்தியாயம் :**
பரிசுத்த ஆவியாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன்.

**2ஆம் பாகம் :**
கிறிஸ்தவ மறைபொருள்களைக் கொண்டாடுதல்.
**1வது பெரும் பிரிவு :**
அருள்சாதனத் திட்டம்
**1வது அத்தியாயம் :**
பாஸ்கா மறைபொருள் திருச்சபையின் காலத்தில்.
**2வது அத்தியாயம் :**
பாஸ்கா மறைபொருளை அருள்சாதனங்கள் வழியாகக் கொண்டாடுதல்.
**2வது பெரும் பிரிவு :**
திருச்சபையின் ஏழு அருள்சாதனங்கள்.
**1வது அத்தியாயம் :**
கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கத்துக்குரிய அருள் சாதனங்கள்.
**2வது அத்தியாயம் :**
குணப்படுத்தலுக்குரிய அருள் சாதனங்கள்.
**3வது அத்தியாயம் :**
கிறிஸ்தவ உறவை வளர்க்கும் அருள்சாதனங்கள்
**4வது அத்தியாயம் :**
திருவழிபாட்டிற்குரிய பிற சடங்குகள்

**3ஆம் பாகம் :**
கிறிஸ்துவில் வாழ்வு.
**1வது பெரும் பிரிவு :**
மனிதனின் அழைப்பு அருள் வாழ்வுக்கு
**1வது அத்தியாயம் :**
மனிதனின் மாண்பு.
**2வது அத்தியாயம் :**
மனித சமூகம்.
**3வது அத்தியாயம் :**
இறைவன் தந்த மீட்பு : சட்டமும் அருளும்.
**2வது பெரும் பிரிவு :**
பத்துக் கற்பனைகள்.
**1வது அத்தியாயம் :**
"உன் ஆண்டவராகிய கடவுளை... அன்பு செய்வாயாக."
**2வது அத்தியாயம் :**
"உன்னை அன்பு செய்வது போல உன் அயலானையும் அன்பு செய்வாயாக."

**4ஆம் பாகம் :**
கிறிஸ்தவ செபம்.
**1வது பெரும் பிரிவு :**
கிறிஸ்தவ வாழ்வில் செபம்.
**1வது அத்தியாயம் :**
செபத்தின் வெளிப்பாடு. செபிக்க எல்லோருக்கும் அழைப்பு.
**2வது அத்தியாயம் :**
செபத்தின் பாரம்பரியம்.
**3வது அத்தியாயம் :**
செப வாழ்வு.
**2வது பெரும்பிரிவு :**
கிறிஸ்து கற்பித்த செபம் : "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே!"
இந்த 2வது பெரும் பிரிவில் அத்தியாயங்கள் இல்லை.


குறிப்பு : ஒவ்வொரு அத்தியாயத்திலும் "சுருக்கம்" உண்டு. இச்சுருக்கங்கள் அடுத்த இதழ்களில் வெளியிடப்படும்.

## 58வது வெளிநாட்டுத் திருப்பயணம்

# அல்பேனியாவில் திருத்தந்தை

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரின் 58வது வெளிநாட்டுத் திருப்பயணம் முன்னாள் கம்யூனிச நாடுகளின் 4ஆவது நாட்டிற்கான திருப்பயணம் மற்றும் அல்பேனியா நாட்டிற்கான திருப்பயணம் கடந்த ஞாயிறு காலை ஆரம்பமானது. ஏப்ரில் 25ஆம் நாளான ஞாயிறு றோம் நேரம் காலை 7-13 மணிக்கு பால்கன் நாடுகளின் ஒன்றான அல்பேனியா நாட்டிற்கான தனது ஒருநாளைய திருப்பயணத்தைத் தொடங்கினார் பாப்பிறை.

றோம் நகருக்குக் கிழக்கே 611 கி. மீ. இருக்கின்ற அல்பேனியத் தலைநகர் திரானாவைத் திருத்தந்தை அடைந்த போது உள்ளூர் நேரம் காலை 8-30 மணியாகும். அல்இத்தாலியா விமானத்தில் பயணம் செய்து திரானா சர்வதேச விமானநிலையத்தை அடைந்த பாப்பிறையை வரவேற்க அல்பேனிய மகளான அன்னை திரேசா, ஆட்சித்தலைவர் சாலி பிறீஷா, இந்தியரான அல்பேனியாவுக்கான திருப்பீடத் தூதுவர் பேராயர் ஐவன் டயஸ், இன்னும் பல பிரமுகர்கள் காத்திருந்தனர். விமானத்திலிருந்து இறங்கிய பாப்பிறை அந்நாட்டு மண்ணை முத்தமிட்டு மரியாதை செலுத்தி அரச மரியாதைகளைப் பெற்று நாட்டுக் கொடிக்கு மரியாதைசெலுத்தி இம் முதல் பயணத்தைத் தொடக்கிவைத்தார்.



அரசுத் தலைவரின் வரவேற்புரைக்குப் பின் திருத்தந்தை தன் முதல் உரையை ஆரம்பித்தார்.

## ஒருமைப்பாடு, வளர்ச்சிக்கு அனைத்து மதத்தவரும் அர்ப்பணிக்கவும்

ஆழமான மண்டியுடனும் இறைவனுக்கான நெஞ்சுடனும் அல்பேனியா நாட்டிற்கான என் முதற் பயணத்தைத் தொடங்குகின்றேன். இவ்வேளையில் அரசுத்தலைவருக்கும், அரசு அதிகாரிகளுக்கும், கிறிஸ்தவ விசுவாசிகளுக்கும், இஸ்லாமிய மதத்தலைவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**அல்பேனியாவின் உன்னத மக்களே!**

என் பாசம் நிறை வாழ்த்துக்களை வழங்குகின்றேன். கடந்த 25 ஆண்டுகளில்பலவித துன்பங்களை நீவிர் அனுபவித்துள்ளீர்கள். இது எங்களாலும் ஐரோப்பாவாலும் உலகம் முழுவதாலும் அவ்வளவு எளிதில் மறந்துவிடமுடியாது. பலவித உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டன. திருப்பீடம் மிகுந்த அக்கறையுடன் உங்களோடு நடந்து வந்தது. இக்காலங்களில் ஜெபத்துடனும், மீட்புப்பணி நடவடிக்கையுடனும் உங்கள் அருகில் இருந்துள்ளது, விடுதலையைத் திரும்பவும் கண்டுள்ள அதே வேளை கலாச்சார ஆன்மீக வளங்களைப் பாரம்பரியமாகக் கொண்டுள்ள இந்நாட்டின் தற்போதைய மண் மீதில் பங்கு கொள்ள வந்துள்ளேன். இன்று 4 ஆண்டுகள் திருநிலைப் படுத்தப் படுவதுடன் தலத்திருச்சபைபுதுப்பிக்கப்பட்ட தூண்டுதலையும் உள்உணர்ச்சியையும் தரவல்லது. நல்ஆலோசனை அன்னையின் திருத்தலத்திற்கான அடிக்கல்லையும் இன்று ஆசீர் வதிக்கவுள்ளேன். உங்களின் பாதையில் ஊக்கத்தைத் தருவதாக இத்திருப்பயணம் இருக்க ஆவல் கொண்டேன். கடந்த காலத் துன்பங்களை அனைத்து மதத்தினரும் ஒன்றிணைந்து அநுபவித்ததுபோல் வருங்காலப் பாதையில் பேச்சு வார்த்தை, ஒருமைப்பாடு, வளர்ச்சி ஆகியவற்றிற்கும் நாட்டின் அனைத்து மதத்தவரும் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்எனவேண்டி அன்னை மரியின் கைகளில் தன் பயணத்தை ஒப்படைத்து அந்நாட்டிற்கான முதல் உரையை நிறைவுசெய்தார் திருத்தந்தை.

### விளையாட்டு அரங்கான பேராலயத்தில் 4 ஆயர்கள் திருநிலைப்படுத்தல்

பால்கன் பகுதியிலே மிகவும் பெரிய 80 மீற்றர் நீளத்தைக் கொண்ட 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கூத்தாடி நகர்ப் பேராலயம் 1967ஆம் ஆண்டில் சர்வாதிகாரி கோர்ஷாவின் கலாச்சார புரட்சியில் விளையாட்டு அரங்கமாக மாற்றப்பட்டது. பின் 1991இல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு கடந்த திருமுழுக்கு நாளன்று மீண்டும் திருநிலைப்படுத்தப்பட்டது. இப்பேராலயத்தில் 4 புதிய ஆயர்கள் திருநிலைப்படுத்தும் கூட்டுத்திருப்பலியைத் தொடங்கினார் பாப்பிறை. நான்கு புதிய ஆயர்களில் மூவர் கம்னியூச ஆட்சியின் போது சிறையில் இருந்தவர்கள். இந்த 4ஆயர்களும் கடந்த ஆண்டு டிசம்பர் 23ஆம் திகதி திருத்தந்தையால் நியமிக்கப்பட்டவர்கள். புதிய ஆயர்களைத் திருநிலைப்படுத்துவதன் மூலம் அல்பேனியாவின் மறை ஆட்சிப்பீடம் மீண்டும் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்தகால துன்பநிலைகளை மனதிற்கொண்டு விடுதலையையும் நீதியினுடைய வருங்காலத்தையும் கட்டியெழுப்ப முன்வாருங்கள். மறைந்து வாழ்ந்த திருச்சபை மீண்டும் திரும்பி வந்துள்ளது. இது ஒரு முக்கியமான வேளை. உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்துகின்றேன். இன்று திருநிலைப் படுத்தப்படும் ஆயர்கள் நாட்டின் ஆன்மிக, கலாசார முன்னேற்றத்திற்காக தங்கள் பங்கையாற்ற ஊக்கமளிக்கின்றேன்.

அல்பேனிய நாட்டின் அன்புமிக்க கத்தோலிக்க சமுதாயமே, வருங்காலத்தைக் குறித்த நம்பிக்கையுடன் செயற்படுங்கள். ஒரே இரவில் நாம் இயேசுவில் உள்ள விசுவாசத்துடன் கடந்தகாலங்களைப் போல் தொடருங்கள். எவ்வித கட்டுப்பாடுமற்ற அன்பின் அடையாளமாக இருங்கள்.

மாலை நேரமாகின்றது, பொழுது சாய்கின்றது. எனச் சீடர்கள் யேசுவைக் கேட்டனர். எங்களோடு தங்கும் யேசுவே. இரவு முடிந்து விட்டது. அல்பேனிய மக்களின் இரவு முடிந்து புதிய நாள் தொடங்கி உள்ளது. எங்களோடு தங்கும். இந்நாளை உமக்கு அர்ப்பணிக்கின்றோம். சகோதர, சகோதரிகளே உண்மையில் இந்நாள் இறைவனால் உருவாக்கப்பட்டநாள். இது குறித்து அகமகழ்வோம் என மறையுரையாற்றினார் திருத்தந்தை.

### திருத்தலத்திற்கு அடிக்கல் நாட்டல்

திருப்பலியின் இறுதியில் நல்லாலோசனை மாதா திருத்தலத்திற்கான அடிக்கல்லை மந்திரித்தார் திருத்தந்தை. மாதா 1895ஆம் ஆண்டு முதல் அல்பேனியாவின் பாதுகாவலியாக இருந்து வருகின்றார். இம்மந்திரிப்பு முடிந்தபின் நன்றிப் பாடல் பாடப்பட்டது.

## "நீவிர் எம் நம்பிக்கையின் அடையாளம்" — அரசுத்தலைவர்

கடந்த ஆண்டு ஏப்ரில் 9 முதல் 48 வயதான மருத்துவரான பிறீஷா ஆட்சித் தலைவராக இருந்து வருகின்றார். இவர் ஓர் இஸ்லாமியர். திருத்தந்தைக்கு பிறீஷா வழங்கிய முதல் வரவேற்புரையில் "திருத்தந்தையே, இறைவன் உம் ஜெபத்தைக் கேட்டுள்ளார். நாங்களும் வருங்காலத் தலைமுறைகளும் எப்பொழுதும் உமக்கு நன்றிக்கடன் உள்ளவர்களாக இருப்போம். சுதந்திர அல்பேனியாவுக்கு வந்துள்ளீர். இப்பயணம் சமய வேறுபாடின்றி எல்லா அல்பேனியர்களின் இதயங்களையும் தொட்டு மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றது. ஏனெனில் நீண்ட காலமாகவே நீவிர் எமக்கு நம்பிக்கையின் அடையாளமாகஇருக்கின்றீர்" என்று பேசினார். இதோடு இப் பால்கன் பகுதியில் இடம் பெற்று வரும் காட்டு மிராண்டித்தனக் கொலைகள் நிறுத்தப்பட்டு அமைதியும் நிம்மதியும் நிலவவேண்டுமென்றும் விண்ணப்பித்தார்.

## வட அயர்லாந்தின் பிரச்சனை

# ஐ. நா. வின் தலையீடு தேவை

வட அயர்லாந்தின் பிரச்சனைக்கு தீர்வு காண்பது ஐக்கிய நாட்டின் ஆக்கபூர்வமான தலையீட்டிற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் அயர்லாந்து பிதா பிதா கருதினால் பிறேகல் டேவிட். இப் பிரச்சனையில் பிரிட்டன் மற்றும் அயர்லாந்து அரசு வேறுபட்டு இருப்பதால் இது ஏற்கனவே சர்வதேச விவகாரமாக மாறியுள்ளது என்று வத்திக்கான் வானொலிக்கு விளக்கியுள்ள பேட்டியில் கூறியுள்ளார் கருதினால் டேவிட்.

வட அயர்லாந்தில் போரிடும் குழுக்கள் மதங்களின் பெயரால் போரிடுவதை அயர்லாந்து மற்றும் பிரிட்டன் ஆதிக்கத்திலிருக்கின்ற வட அயர்லாந்து கத்தோலிக்கரும் புரட்டஸ்தாந்து தலைவரும் வெறுக்கின்றனர் என்பதையும் கருதினால் குறிப்பிட்டார். வட அயர்லாந்தை அயர்லாந்து குடியரசோடு சேர்க்க வேண்டுமெனப் போராடும் புரட்சிக் குழுவுக்கும் வட அயர்லாந்து பிரிட்டனோடு இருக்கவேண்டுமென்ற அரசியல் குழுக்களுக்கு மிடையே நேரடியான பேச்சு வார்த்தை இடம்பெறுவதையும் வரவேற்றுள்ளார் கருதினால் டேவிட்.

## திருப்பாலத்துவ சபையின் 150 ஆண்டு நிறைவு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபை குழுத்தலைவர்கள் வழிகாட்டியாகவும், உதாரகுண வாழ்வையும் வாழ வேண்டிய தன் அவசியத்தை அடிகளார் அழுத்தந்திருத்தமாக எடுத்தியம்பினார்.

தேநீர் விருந்திற்கு பின் மகிழ்ச்சி பொழுது போக்காக பாலகர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டும் கலைநிகழ்ச்சிகளை நடாத்தி எல்லோரையும் மகிழ்ச்சி கடலில் தள்ளினர். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை அருட் சகோதரி எம். பிளசிடா அவர்களோடு இணைந்து பாலத்துவ சபை குழுத்தலைவர்கள் மேற்கொண்டனர். மேற்படி விழாவுக்கு மகாஎலிய டெஸ்போட் கீழ்பிரிவு, டெஸ்போட் மேல் பிரிவு, எஸ்டேல், மட்டக்கெல, சென். யேம்ஸ் தோட்டத்தைசேர்ந்த 175 பாலகர்கள் பங்கெடுத்தனர். பாலத்துவ சபை சபை சிறுவன் ஒருவனின் நன்றியுரையோடு இனிய இவ்விழா 12. 30மணிக்கு நிறைவு பெற்றது.

தகவல்
சிங்கராயர் - லியோ ஜோசப்
புனித அந்தோனியார் ஆலயம்
மட்டக்கல — தலவாக்கலை.

## ஆசிரியரின் ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தையில் நம்பிக்கை கொண்டு அன்புப் பணிபுரிய வேண்டும், என்று கருத்துப்பட ஆசிரியர்களது மனதில் சேவை மனப்பான்மையை வலியுறுத்தினார்.

கருத்துரை வழங்கிய அருட்தந்தைக்கும் இச்சந்தர்ப்பத்தை ஒழுங்கு செய்த பங்குத்தந்தை ஜோர்ஜ் அடிகளாருக்கும் கத்தோலிக்க ஆசிரியர் சார்பில் திரு. அன்ரனி நன்றி கூறினார்.

தகவல் :
அ. பிரான்சிஸ்கா

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1993 ஆம் ஆண்டு மே மாதம் 07ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல. QB/1001/58/81